## சுருக்கம்

பொதுப் பணிகள் – காலியிட மதிப்பீடு கணிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் – திருத்திய ஆணை – வெளியிடப்படுகிறது.

### பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை

அரசு ஆணை(நிலை) எண்.123

நாள்: 10.09.2009
திருவள்ளுவராண்டு 2040,
ஆவணி 25.
படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண்.368,பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி.எஸ்) துறை, நாள் 18.10.1993.
2) அரசு ஆணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.01.1996.
3) அரசு கடித எண்.97180/எஸ்/1994–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 28.05.1996.
4) அரசு கடித எண்.13435/ப்பி/2001–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 26.06.1998.
5) அரசு கடித எண்.67770/ப்பி/2001–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(ப்பி) துறை, நாள் 19.12.2001.

ஆணை:

காலியிட மதிப்பீடு கணிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து மேலே வரிசை எண்.1–4 ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகள்/கடிதங்களில் நெறி முறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே வரிசை எண். 5 ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் எதிர்பாரா இனங்களுக்கென(Unexpected Contingencies) ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் மற்றும் விடுப்பில் செல்வதால் ஏற்படும் காலியிட ஒதுக்கீடு (Leave Reserve)தவிர்த்து உள்ளபடியாக உள்ள காலிப்பணியிடங்களை (Actual Vacancies) மட்டும் கணக்கில் கொள்ள ஆணையிடப்பட்டது. இத்தகைய பணியிடங்கள் பணியாளர் குழுவில் ஒப்புதலைப் பெற்று நிரப்பப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

3. இவ்வாணைகளை கவனமாகப் பரிசீலனை செய்து அரசு கீழ்க்காணும் திருத்திய ஆணைகளை வெளியிடுகிறது.

I. அரசாணை (நிலை) எண். 368, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(பணி.எஸ்) துறை, நாள் 18.10.1993 மற்றும் அதன் தொடர்ச்சியாக மேலே வரிசை எண். 2–4 ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகள்/அரசுக் கடிதங்களில் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளை(2001–ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலை) காலியிட மதிப்பீட்டினை நிர்ணயம் செய்ய இனி கடைப்பிடிக்கலாம்.

II. நேரடி நியமனங்களை பொறுத்தமட்டில், கீழ்கண்ட இனங்களின் மீது பணியாளர் குழுவின் (Staff Committee) ஒப்புதல் பெறப்பட்டு அரசால் ஆணை வழங்கப்பட்ட பின்னரே நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| தொகுதி A | 10 காலிப் பணியிடங்களுக்கு மேற்பட்ட இனங்கள் (அல்லது) ஆண்டுக்கு ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்ட தொடர் செலவினம் ஏற்படுத்தக்கூடிய இனங்கள். |
| தொகுதி B | 25 காலிப் பணியிடங்களுக்கு மேற்பட்ட இனங்கள் (அல்லது) ஆண்டுக்கு ரூ.75 இலட்சத்திற்கு மேற்பட்ட தொடர் செலவினம் ஏற்படுத்தக்கூடிய இனங்கள். |
| தொகுதி C மற்றும் D | 50 காலிப் பணியிடங்களுக்கு மேற்பட்ட இனங்கள் (அல்லது) ஆண்டுக்கு ரூ.60 இலட்சத்திற்கு மேற்பட்ட தொடர் செலவின்ம் ஏற்படுத்தக்கூடிய இனங்கள். |
| ஒருங்கிணைந்த பணி நியமனங்கள் (Combined Recruitment) | மேற்கூறப்பட்ட எந்த தொகுதிகளும் ஒருங்கிணைப்பு பணி நியமனம் செய்யக் கருதும் நியமனங்களில் தொடர் செலவினம் ஆண்டுக்கு ரூ.60 இலட்சத்திற்கு மேற்படும் இனங்கள் (Multiple Contingencies). |

III. அரசு நியமன அதிகாரியாக இருக்கும் பதவிகளுக்கான பதவி உயர்வு / பணி மாறுதல் காலியிட மதிப்பீட்டினை நிர்ணயம் செய்ய பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை மற்றும் நிதித் துறையின் ஒப்புதல் பெறப்பட்டு காலியிட மதிப்பீடு நிர்ணயம் செய்ய வேண்டும். பணியாளர் குழுவின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.என். வெங்கட்ரமணன்
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை – 9
அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை – 9
அனைத்து துறைத் தலைவர்கள்/மாவட்ட ஆட்சியர்கள்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 (10 நகல்கள்)
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை – 108
மாநில கணக்காயர், சென்னை –18/35/9
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 9

நகல்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம், சென்னை – 9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து அலுவலர்கள்/பிரிவுகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 11/9/09
11/9/09